DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**

**S.C.** 60/2024

**Prosecution Witness** : 2

**Accused present. Both side counsels present.**

அரசு தரப்பு சாட்சி அசா.2 திரு. சரவணன் ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

இறந்துபோன புகழ்நாதன் என் தம்பி. முதல் விசாரணையில் நான் மாங்கரை, அம்மாபட்டியில் குடியிருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் கொட்டார பட்டியில் குடியிருக்கிறேன். அம்மாபட்டி(**PO**) ஆகும். கொட்டார பட்டி கிராமத்திற்குள் நுழையும் போது வலது பக்கத்தில் முதல் வீடு எதிரியின் தங்கை வீடு. கிழக்கு தெரு வழியாக தான் ஊருக்குள் வரவேண்டும். வேறு பாதைகள் கிடையாது. கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய தெருக்கள் எங்கள் ஊரில் உள்ளது. கிழக்கு தெருவில் நாடக மேடை, சமுதாய கூடம் ஆகியவை கிழக்கு தெருவின் நடுப்பக்கத்தில் உள்ளது. எங்கள் ஊர்க்காரர்கள் மேற்கண்ட இடங்களில் உட்கார்வார்கள் என்றால் சரிதான். முதல் முறையாக ஆத்தூர் நீதிமன்ற நடுவர் தான் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நடுவர் முன் நான் கொடுத்த வாக்குமூலத்தில் ராஜா, புகழ்நாதனை அடித்து கீழே தள்ளிவிட்டார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜாவின் பாட்டியின் வீடும் , என் வீடும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து நான் திரும்ப வரும்போது ராஜாம்மாள், பெரிய பழனியம்மாள், சின்ன பழனியம்மாள், ராணி ஆகியோர்கள் என்னை விசாரிக்க வந்தார்களா என்றால் ஆமாம். என் வீட்டில் என் தாய், தகப்பனார் அப்போது இருந்தனர். எங்கள் வீட்டின் சந்துக்குள்ளேயே கோபால் என்பவரின் வீடும் உள்ளது. கிழக்கு தெருவின் ரோட்டின் எதிர்புறம் போலீசார் வரைபடத்தில் காட்டியுள்ளது போல இருக்கிறது. என் வீட்டில் இருந்து மெயின் ரோட்டிற்கு வரும் பாதை ஒரு கார் போகும் அளவிற்கு இருக்கிறது, அது மண் பாதை. மெயின் ரோடு

சிமெண்ட் பாதை. அந்த மண் பாதையில் இறங்கி சென்றால் 15 அடி தூரத்தில் என்னுடைய வீடு இருக்கிறது. என்னை என் வீட்டின் வாசலில், ரோட்டின் மீது இறக்கி விட்டுவிட்டு புகழ்நாதன் சென்றார். நான் வீட்டிற்குள் போன போது சத்தம் கேட்டது என்றால் இல்லை, நான் வீட்டிற்கு வெளியே இருந்தேன். என் வீட்டிற்கு செல்லும் பாதையில் வலதுபுறம் தங்கம் என்பவரின் இடிந்த நிலையில் வீடு இருக்கிறது என்றால் சரிதான். அது தரை மட்டாகவே இருக்கிறது. என் வீட்டு வாசல் கிழக்கு பார்த்து இருக்கிறது. ராஜாவின் பாட்டி வீடு தெற்கு பார்த்து இருக்கிறது. எதிரி ராஜா வீட்டின் முன்பு சண்டை நடக்கவில்லை. என் வீட்டின் முன்பு தான் நடந்தது. சிமெண்ட் ரோட்டில் சண்டை நடக்கவில்லை என்றால் இல்லை. அங்கு தான் நடந்தது. சிமெண்ட் மெயின் ரோட்டில் ராஜா வீடு இருக்கிறது என்றால் இல்லை. மெயின் ரோட்டின் வலது புறம் இருக்கிறது. நீதிமன்ற நடுவர் முன்பு கொடுத்த வாக்குமூலத்திலும், போலீஸ் விசாரணையிலும் முதல் விசாரணையில் சொன்னது போல புகழ்நாதனை எதிரி ராஜா கீழே தள்ளி விட்டு கைகளால் தலையிலும், நெஞ்சிலும் அடித்தார் என்று சொல்லி இருக்கிறேன். கீழே தள்ளிவிட்டு அடிப்பதற்கும், அடித்துவிட்டு கீழே தள்ளி விடுவதற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். ராம் குமார் பைக்கில் சென்றதை பற்றி போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. என்னை ஆய்வாளர் 19.01.2024 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். ராஜாவின் வீட்டு வாசலில் புல்லட் கிடந்தது என்றால் அது நின்று கொண்டு இருந்தது. அது ராம் குமாருக்கு சொந்தமானது. ராம் குமாரின் வீடு எங்கள் ஊரின் கிழக்கு பக்கம் உள்ளது. ராம் குமார் இந்த சம்பவத்தை கேள்விபட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்தார். ராம் குமாரிடம் அவருடைய பைக் சம்பவ இடத்தில் இருக்கிறது என்று சொன்னேன். மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. மருத்துவமனையில் சம்பவத்தை நான் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியா என்று போலீசார் கேட்கவில்லை, நானும் சொல்லவில்லை. சம்பவ இடத்தில் இரத்தம் எதுவும் சிந்தி

இருந்தது என்றால் இல்லை. புகழ்நாதன் உடலில் இரத்த காயம் எதுவும் இல்லை. போலீஸ் விசாரித்தபோது சத்தம் கேட்டு தான் மெயின் ரோட்டிற்கு வந்தேன் என்றால் இல்லை. புகழ்நாதன் ராஜா வீட்டு வாசலில் சென்று கெட்ட வார்த்தைகளால் அவரை திட்டி, ஏன் தனது சகோதரியான, ராஜாவின் மனைவியான சரண்யாவை ஏன் ராஜா தங்கள் வீட்டிற்கு அனுப்பவில்லை என்று கேள்வி கேட்டு சண்டை போட்டார் என்றால் இல்லை. புகழ்நாதன் எதிரி ராஜாவை தனது நகத்தை வைத்து ராஜாவின் இரண்டு தோள்பட்டைகளிலும், வலது காதின் பின்புறமும், இடது மூக்கின் கீழ் பகுதியிலும் பிராண்டி வைத்து அடித்தார் என்றும், அப்போது புகழ்நாதன் அவரே நிலை தடுமாறி கீழே விழுந்து அவருக்கு தலையில் உள்புற காயங்களும், முழங்காலில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே உள்ள சிவில் வழக்கு சம்பந்தமாக பகை இருக்கிறது என்றும் அதை மனதில் வைத்து எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே சொன்னது போல சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கை வலுப்படுத்த வேண்டும் என்பதற்காக ஆத்தூர் நடுவர் நீதிமன்றத்தில் பொய்யாக வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் இல்லை. சாட்சிகள் செல்வக்குமார், ஜெயராணி ஆகியோர்களின் வீடு என் வீட்டில் இருந்து தொலைவாக உள்ளது என்றும், அவர்கள் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்ததாக பொய்யாக கூறியிருக்கிறேன் என்றால் இல்லை.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.08.14 19:10:18 +0530